# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



# நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம்
# தோளூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை : திரு.செ. நவலடி அவர்கள்,**

ந.க.எண்: 01/2023-24 நாள்: 13.03.2024

பொருள்: மனைப்பிரிவு - நாமக்கல் மாவட்டம் - மோகனூர் வட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம் - தோளூர் கிராமம் ATC கணபதி நகர் - சர்வே எண்: 108/7 – ல் 2.0871 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது -இறுதி வரன்முறை செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3) த்துறை நாள்:04.05.2017.
2. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019.
3. அரசாணை எண்:138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)) த்துறை நாள்:04.06.2004.
4. உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல், அவர்களின் ந.க.எண்:460/2021, நாள்:30.03.2023.
5. திரு.C.தங்கராஜீ கதவு எண்:35B1 பரணி நகர், மோகனூர் ரோடு, நாமக்கல் அவர்களின் விண்ணப்ப நாள்: 06.02.2024

உத்தரவு:

பார்வை 4 ல் கண்ட உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அனுமதி கடிதத்தின் படி, நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டாரத்திற்கு உட்பட்ட தோளூர் ஊராட்சியில் ATC கணபதி நகர், ச.எண்:108/7 ல் 2.0871 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின் படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ம.வ.ந.ஊ. (நாமா) எண். 108/2023 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், தோளூர் ஊராட்சியில் ATC கணபதி நகர் ச.எண்:108/7 ல் 2.0871 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலமானது நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவிற்கான பரப்பு:

2.0871 ஏக்கர் (அ) 8446.12 சதுரமீட்டர்

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 3 ல் காணும் அரசாணையின்படி மேற்கண்ட இடத்திற்கு 3% வழிகாட்டி மதிப்பு (Guide Line Value) கட்டணம் ரூ.18,800/- செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்ததின் படி மனுதாரர் கீழ்க்கண்ட கட்டணம் செலுத்தியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| மனையிட ஒப்புதல் கட்டணம் | = | 8446.12 ச.மீ (2.0871 ஏக்கர்) |
| | = | 18,800.00/- |

அரசாணை (நிலை) எண்:79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ 4 (3) த்துறை நாள்: 04.05.2017 ன் படி அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் 3% கட்டணமாக ரூ.18,800/- (Challan Number: 2024206009143) உரிய அரசு கருவூலம் கணக்கு தலைப்பில் 07.02.2024 அன்று செலுத்தி தோளூர் ஊராட்சிக்கு சலான் நகல் வழங்கியுள்ளனர்.

இதேபோன்று அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 ன் படி அனுமதியளிக்கப்பட்ட மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 33 மனைகளுக்கு ரூ.33000/- மற்றும் ஆய்வு கட்டணம் ரூ.1000/- ஆக மொத்தம் ரூ.34000/- த்தை ஊராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் தோளூர் ஊராட்சி கணக்கு எண்: Indian Bank Chennai A/C No: 7387702408, SNA A/C என்ற கணக்கில் 07.02.2024 அன்று சலான் மூலம் தொகை செலுத்தி சலான் நகல் வழங்கியுள்ளார்.

எனவே மனுதாரரால் உரிய கட்டணத் தொகை செலுத்தப்பட்டுவிட்டதால் தோளூர் ஊராட்சியில் ATC கணபதி நகர் ச.எண்:108/7 ல் 2.0871 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனைபிரிவிற்கு ஊராட்சி மன்றத்தின் மூலம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

**நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்:**

1. பார்வை 4 ல் காணும் உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால், உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திரப்பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக, மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த / சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.
8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும் பத்திரப்பதவு செய்யும்போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.
9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

S. Manu... 13-3-2024
தலைவர்,
தோளூர் ஊராட்சி,
மோகனூர் வட்டாரம்.

பெறுதல்

C. தங்கராஜீ
கதவு எண்: 35B பரணி நகர்,
மோகனூர் ரோடு,
நாமக்கல்.

நகல்-

1. உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.
2. சார்பதிவாளர், மோகனூர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மோகனூர், நாமக்கல் மாவட்டம்.

# தோளூர் ஊராட்சி மன்றம்

தோளூர் அஞ்சல்,

மோகனூர் ஊராட்சி ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 தேதி புதன் கிழமை காலை / மாலை 11:00 மணிக்கு தோளூர் ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண / சிறப்பு / அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

மொத்த உறுப்பினர்கள் தலைவர் உள்பட 7 பேர்கள்

வருகை உறுப்பினர்கள் தலைவர் உள்பட 7 பேர்கள்

| பொருள்கள் – 3 | தீர்மானங்கள் – 3 |
|---|---|
| நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், தோளூர் ஊராட்சி, தோளூர் கிராமம் ATC கணபதி நகர் ச.எண் 108/7ல் 2.0871 ஏக்கர் பரப்பளவில் 33 வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டு ஊராட்சிக்கு உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் மற்றும் பூங்காவிற்கான இடங்களை தானபத்திரம் பத்திர எண் : 299/2023 நாள்: 30.01.2023 ன்படி C.தங்கராஜு நாமக்கல் என்பவர் ஊராட்சிக்கு ஒப்படைத்துள்ளார். எனவே ச.எண் 108/7ல் அமைந்துள்ள 33 வீட்டு மனைகளுக்கு ஊராட்சியின் மூலம் ஒப்புதல் வழங்கி இறுதி வரைமுறை செய்து உத்திரவு வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தோளூர் ஊராட்சியில் ச.எண் 108/7ல் அமைந்துள்ள 33 வீட்டுமனைக்கு ஊராட்சியின் மூலம் ஒப்புதல் வழங்கி இறுதி வரைமுறை செய்து உத்தரவு இட மன்றம் ஏமகனதாக அங்கீகாரம்செய்யப்பட்டது. |

S. Mani 13/03/2024

உண்மை நகல்

தலைவா
தோளூர் ஊராட்சி

இடம்: தோளூர்

தேதி: 13.3.2024

தலைவர்,
ஊராட்சி மன்றம், தோளூர்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate